**கந்தகெட்டிய பிரதேச சபை**
**பதுளை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 ஏப்பிரல் 26 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை மற்றும் 2019 மே 30 விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கந்தேகட்டிய பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | கலஉட நீர் செயற்றிட்டத்திற்கு உரிய கடன்கொடுத்தோர் ரூபா 204,431 குறைத்துக் காட்டியிருந்த காரணத்தினால் கடன் கொடுத்தோர் மற்றும் ஆண்டின் செலவினம் என்பன அப்பெறுமானத்தினால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | கணக்கீட்டுக் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (ii) | மீகஹகிவுல பிரதேச சபைக்குச் செலுத்த வேண்டிய பெக்கோ இயந்திர சேவையை வாடகைக்குப் பெற்றுக் கொள்வதற்கான வாடகைக் கட்டணம் ரூபா 41,000 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | கணக்கீட்டுக் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (iii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்குரிய ரூபா 3,996,204 பெறுமதியான 2 நிலையான வைப்புக்களின் பெறுமதி நிதி நிலைமைக் கூற்றுக்களில் | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | கணக்கீட்டுக் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | காட்டப்பட்டிருக்கவில்லை. | | |
| (iv) | நிலையான வைப்பிற்குக் கிடைக்க வேண்டிய வட்டி ரூபா 1,789,844 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | கணக்கீட்டுக் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (v) | மீளய்வாண்டின் நவெம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களில் மீள்நிரப்பப்பட வேண்டிய உறுப்பினர் கொடுப்பனவு ரூபா 510,000 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | தற்போது நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது. |

**(ஆ) கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 5,903,860 பெறுமதியான சொத்து விடயங்கள் மற்றும் ரூபா 156,476 பெறுமதியான கடன்பட்டோர் மீதி 02 என்பன பத்திரம், திட்டவரைபடம் மற்றும் கட்டளை, மதிப்பீட்டு அறிக்கை மீதி உறுதிப்படுத்தல் என்பன சமர்ப்பிக்கப்படாத காரணத்தினால் கணக்காய்வின் போது திருப்திகரமான முறையில் சான்றுறுதிப் படுத்தப்பட முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | சான்றுகளைத் தேடியறிந்து குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் 158, 159 ஆம் பிரிவுகள் | மீளாய்வாண்டிற்குரிய ரூபா 146,250 தொகையான நிலுவை வருமானம் அறவிடப்படவில்லை. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்திற்கு அமைய செயற் படுவதற்கு உத்தியோகத்தர்கள் தெரியப்படுத்தப் பட்டுள்ளனர். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதி 218 | சபைக்கு சொந்தமான காணி மற்றும் கட்டிடங்கள் வருடாந்தம் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்க வில்லை. | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதிக் கோவையின் 218 ஆம் விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்திற்கு அமைய செயற்படுவதற்கு உத்தியோகத்தர்கள் தெரியப்படுத்தப் பட்டுள்ளனர். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள்<br>------------------------<br>நிதிப் பிரமாணம் 371 | பிரதேச சபையினால் 2002, 2006 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் மூன்று தரப்பினருக்கு 04 சந்தர்ப்பங்களின் போது செலுத்தப்பட்டிருந்த ரூபா 67,500 ஆன கட்டுநிதியொன்று தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | கட்டுநிதி அச்செயற்பாடு நிறைவுபெற்றவுடன் தீர்வுசெய்யப்பட வேண்டும். | கட்டுநிதியை தீர்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,247,092 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,542,705 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட் ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i | வீதவரியும் வரியும் | - | 2,183,000 | 2,111,496 | 71,504 | - | 1,615,695 | 1,739,378 | - |
| ii | வாடகை | - | 2,145,701 | 2,112,901 | 32,800 | - | 1,877,742 | 1,874,742 | 2,500 |
| iii | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 848,000 | - | 806,050 | 41,950 | 648,000 | - | 898,850 | - |
| iv | ஏனைய வருமானம் | 333,500 | - | 567,513 | - | 333,500 | - | 491,583 | - |
| | மொத்தம் | 1,181,500 | 4,328,701 | 5,597,960 | 146,254 | 981,500 | 3,493,437 | 5,004,553 | 2,500 |

## 2.2.2 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்

### (அ) நீதிமன்றத் தண்டப்பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட ரூபா 1,300,000 நீதிமன்றத் தண்டப்பணம் அறவிடப்பட்டிருக்க வில்லை. | நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் அறவிடப்பட வேண்டும். | அட்டவணை மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் மூலம் பிரதான அமைச்சின் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |

### (ஆ) முத்திரைக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட முத்திரைக் கட்டணம் ரூபா 600,000 அறவிடப்பட்டிருக்க வில்லை. | நிலுவை முத்திரைக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | அட்டவணை மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் மூலம் பிரதான அமைச்சின் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 30 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையிலும் 23 விடயங்கள் தொடர்பாக மாத்திரம் உபவிதிகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன. | உப விதிகள் விதிக்கப்படாத விடயங்களுக்காக உபவிதிகள் பிறப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் உப விதிகளை பிறப்பிப்பதற்கு அல்லது பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் செயல்நடவடிக்கை திட்டமொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(இ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2012 ஒக்தோபர் 05 ஆந் திகதிய 1178/45 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரதேச சபை திண்மக்கழிவுப்பொருள் முகாமைத்துவம் தொடர்பாக நிறைவேற்றப்பட்ட உப வதி பிரதேச சபையினால் பின்பற்றியிருந்த போதிலும் கழிவுப்பொருள் வரி அறவிடப்பட வேண்டிய வளவுகள் இனங்காணப்பட்டு வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் கழிவுப்பொருள் வரி அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் கழிவுப்பொருள் வரி அறவிடப்படும் வேலைத்திட்டமொன்று தயாரிப்பதற்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. |

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகளின் ''நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் - 2030'' தொடர்பாக சபை அறிந்திருந்த போதிலும், சபைக்குரியதாக முடியமான வகையில் இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கு குறிகாட்டிகளை இனங்கண்டு அதன் பிரகாரம் வருடாந்த இலக்கு அடைதலின் முன்னேற்றம் அளவிடப்பட வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கான குறிகாட்டிகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகக் காணப்படும் கிடைக்க வேண்டிய மூலதன வருமானம், தீர்க்கப்பட வேண்டிய கைத்தொழில் செலவினம் மற்றும் நிலுவையாகவுள்ள கடை கேள்விப் பண மொத்தம் ரூபா 13,252,744 என்பன மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடப்பட வேண்டிய தரப்பினரை இனங்கண்டு அறவிடப்பட வேண்டும். | அறவிடப்பட வேண்டிய தரப்பினரை இனங்கண்டு அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |
| (ஆ) 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகக் காணப்படும் செலுத்த வேண்டிய செலவினக் கடன்கொடுத்தோர், நிர்மாண கடன்கொடுத்தோர் மற்றும் ஓய்வூதிய மீதிகள் என்பவற்றின் கூட்டுத் தொகை ரூபா 13,514,162 மீளாய்வாண்டின் போது தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 பதவிக்குரிய மிகை பதவியணியினர் 02 ஆக காணப்பட்டன. | பதவியணியினர் அங்கீகரித்துக் கொள்ளப்பட வேண்டும். | இவ்வாண்டில் மிகை பதவியணியினரை அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |
| (ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 11 பதவிகளுக்குரியதாக காணப்பட்ட 11 வெற்றிடங்கள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வெற்றிடங்களை நிரப்பப்பட வேண்டும் | உள்ளூராட்சி மன்ற திணைக்களம் அறிவூட்டப்பட்டதாகவும் இதுவரை வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**3.4 வருடாந்த பெறுகை செயற்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்காக பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த பாதீட்டிற்கு இணங்கும் வகையில் பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.5 விளைவற்ற சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| கெப் வண்டியொன்றும் உழவு இயந்திரமொன்றும் 06 ஆண்டுகளாக விளைவற்றுக் காணப்பட்டன. | உரிய சொத்துக்களை திருத்தி பயன்பாட்டிற்கு எடுக்க வேண்டும். | கெப் வண்டி திருத்தம் செய்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |

## 4. கணக்கீட்டு நடவடிக்கை மற்றும் நல்லாளுகை

### 4.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் 2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(01) ஆம் இலக்க உள்ளகக் கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் காலாண்டிற்கு ஒருமுறை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக 01 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் நடாத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் கணக்காய்வுக் குழுக்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |